**இலங்கை சமுர்த்தி அதிகாரசபை - 2013**

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புகள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் V ஆம் பகுதியின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் 2014 சனவரி 03 ஆம் திகதி முதல் இத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அதிகாரசபையின் கலைத்தல் நடவடிக்கைகள் 2014 யூலை வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை இல. 11 இன் பிரகாரம், ‘‘தவறு நேர்ந்த காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டுத் தொகைகள் மீளக் குறிப்பிடப்படுவதன் மூலம் பின்னோக்கி சீராக்கப்பட்டுள்ளது’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் போதியளவான முற்காலப்பகுதிக்குரித்தான தவறுகளான ரூபா 25,678,957 தொகையான வரவு மீதியும் ரூபா 1,370,442,148 தொகையான செலவு மீதியும் இனங்காணப்பட்டதை அடுத்து பின்னோக்கி சீராக்கப்படுவதற்குப் பதிலாக முன்கொண்டுவரப்பட்ட பற்றாக்குறைக்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியம இல. 03 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல்வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் நிதிக்கூற்றுக்களில் அவை தொடர்புபட்ட காலப்பகுதியிலேயே உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் வங்கி நிதிப் பிரிவின் முன்னைய ஆண்டிற்கு உரித்தான ரூபா 12,483,665 தொகை மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 மார்ச் இறுதி வரையான காலப்பகுதியின் போது சமுர்த்தி நலன்பெறுனர்களின் கட்டாய சேமிப்பு, அதிகாரசபையின் முதலீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஏப்ரல் முதல் அச் சேமிப்புகள் சமுர்த்தி தலைமைச் சங்கங்களில் முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், நலன்பெறுனர்களின் கட்டாய

சேமிப்புக்களில் ஒரு பகுதி அதிகாரசபைக் கணக்குகளிலும் மிகுதி தலைமைச் சங்கக் கணக்குகளிலும் உள்ளடக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் சொத்துக்களுக்காக நிலவும் பெறுமானத்தேய்வுக் கொள்கைகளின் பிரகாரம் கட்டிடத்திற்காக, நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்ட போதிலும் வங்கி நிதிப் பிரிவின் கட்டிடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட ஆண்டின் பின்னரான ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. இவ்வாறே கணனி போன்ற உபகரணத்திற்காக அதிகாரசபை மற்றும் வங்கியின் நிதிப் பிரிவால் ஒன்றுடனொன்று முரணான சதவீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி நிதிப் பிரிவால் கட்டிடத்திற்காக ரூபா 29,455,000 தொகை குறைவாக பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் உபகரணங்களுக்காக ரூபா 122,035 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 05 வங்கிச் சங்கங்களுக்காக ரூபா 5,276,248 கூட்டுத்தொகையான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுமானத்தேய்விடப்படாத சொத்தான காணிகளின் பெறுமதி கணக்குகளில் வேறாகக் காண்பிக்கப்படாது காணி, கட்டிடமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் பெறுமானத்தேய்வுக் கணிப்பீடும் தவறாகக் காணப்பட்டது.

(இ) வங்கி நிதிப் பிரிவின் நிர்வாகச் செலவினங்களின் ஓர் பகுதி பூர்த்தி செய்யப்படுவதற்காக இலாபம் பெறும் சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 12,924,674 தொகை முன்கொண்டுவரப்பட்ட பிடித்து வைத்தல் இலாபத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறையற்ற பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்கு உரித்தான 04 மாவட்டங்களில் சமுர்த்தி ஊழியர்களின் ரூபா 49,345,487 தொகையான கடன் தவணைப் பண அறவீடுகள் 2014 யூன் வரையிலும் அவர்களது தனிப்பட்ட கணக்குகளுக்கு பிரதி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

ஊழியர்களுக்காக வழங்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிக் கடன் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 539,712 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 தெளிவாக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுக் கணக்காய்விற்கு உட்பட்ட இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் 12 வங்கிச் சங்கங்களால் முதலீட்டிற்காக அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நலன்பெறுனர்களின் கட்டாய சேமிப்பு மீதிக்கும் அதிகாரசபையின் தகவல்களின் படி குறிப்பிடப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 2,281,381 தொகையான வேறுபாடு

நிலவியதுடன் அவ் வேறுபாடு ஒப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி நிதிப் பிரிவின் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மூன்று கடன் வகைகளுக்குரிய வட்டி வருமானம் அக் கடன் வகைகளுக்கு உரித்தான தர அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட வட்டி வருமானத்துடன் நிலவிய ரூபா 178,083 தெகையான வேறுபாடு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வங்கிச் சங்கங்களுக்காக காணி, கட்டிடங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்த செலவினப் பட்டோலையின் படி ரூபா 623,817,076 தொகையானதுடன் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 589,100,000 தொகையானமையால் ரூபா 34,717,076 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் நுகர்வுக் கடன் | 660,709,153 | தனியான மீதிப் பட்டியல் |
| (ஆ) | தேசத்திற்கு மகுடம் - 2014 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 212,000,000 | திறைசேரியால் மீளளிக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | களஞ்சிய வாடகை வைப்பு | 1,454,112 | வாடகை உரிமையாளர்களால் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் |
| (ஈ) | "ஈ" சமுர்த்தி பயிற்சிச் செலவினம் | 1,621,093 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரமான தகவல்கள், வரவுப் பதிவேடு |
| (உ) | வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பிற்காக வெற்றிபெற்றோரின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பிலான செலவினம் | 1,429,912 | தயாரிக்கப்பட்ட வெற்றிபெற்றோரின் பெயர்ப்பட்டியல் தொடர்பான விபரம் |
| (ஊ) | எழுதுகருவிகளின் சுழற்சி நிதியத்தின் இருப்பு வேறுபாடு | 437,287 | விபரமான தகவல்கள் |
| (எ) | அபிவிருத்திப் பிரிவு 7 இன் செலவினங்கள் | 41,587,816 | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் |

(ஏ) சமுர்த்தி வங்கிச் சங்கங்களிலும் பொதுச் சங்கங்களிலும் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது நேர்ந்திருந்த 157 நிதி மோசடி/ முறைகேடுகள் தொடர்பாக உரிய விபரமான தகவல்கள் மற்றும் ஆய்வுகளின் தற்போதைய செயல் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) எழுதுகருவிகளின் சுழற்சி நிதியத்தின் மீளாய்வாண்டிற்கு உரித்தான 36 நாட்குறிப்புப் பதிவுகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந் நாட்குறிப்புகளுக்கு உரித்தான விபரமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் மோட்டார் சைக்கிள் கடன்

08 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்தொகைகளில் 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 345,661 கூட்டுத்தொகையான மீதி 2014 நவம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் நுகர்வுக் கடன்

(i) தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட குருநாகல் மாவட்டத்தின் 1,417 கடனாளிகளில் 118 கடனாளிகளிடமிருந்து 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 983,678 கூட்டுத்தொகையான கடன் மீதி அறவிடப்படுவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 05 மாவட்டங்களுக்கு உரித்தான கடன் மீதி தொடர்பாக 2009 ஆம் ஆண்டின் பின்னர் தனியான கணக்கு மீதிப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் வீடமைப்புக் கடன்

(i) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மரணமான 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்களின் கூட்டுத்தொகையான ரூபா 1,588,423 தொகை 2014 யூன் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபையின் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரித்தாக நிலவிய ரூபா 1,547,858 தொகையான கடன் மீதி 2014 யூன் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்வேறு காரணங்களால் சேவையை முடிவுறுத்திக் கொண்ட 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,819,702 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊழியர் இடர் கடன்

(i) 20 உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் தவணைப்பணமாக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 337,625 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 12 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 484,303 கூட்டுத்தொகையான கடன் மீதி மற்றும் மீளாய்வாண்டின் போது 4 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 744,810 கூட்டுத்தொகையான கடன்தொகைகளில் ஒரு தவணைப்பணமேனும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் 72 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 679,346 தொகை 2014 யூன் வரையிலும் உரிய உத்தியோகத்தர்களுக்கு தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்பட்டிராத முற்பணங்கள் - மாவட்டச் செயலாளராக ரூபா 4,981,334 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் மீதியில் 1997 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது விடுவிக்கப்பட்டிருந்த முற்பணம் காணப்பட்டது. இதில் வேலை நீக்கம் செய்யப்பட்ட, மரணமடைந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தைப் போன்று அதிகாரசபையின் தோல்வியுற்ற செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களும் காணப்பட்டன. நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த இம் முற்பண மீதியைத் தீர்ப்பதற்கு அதிகாரசபையால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | ஊழியர் ஒருவர் கேட்டு விலகல்கள், ஓய்வு பெறுதல், மரணித்தல் அல்லது சேவையிலிருந்து இடைநிறுத்தல் உள்ளடங்கலாக எந்தக் காரணங்களாலும் சேவை நிறுத்தப்பட்டிருக்கையில் அந்நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய போதிலும் கருத்திற்கொள்ளப்பட்ட மீளாய்வாண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியின் போது 03 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரை தாமதமடைந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட 30 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) | 2013 யூன் 05 ஆம் திகதிய பீசீஎம்டி/பீஆர்/2013 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகத்தின் சுற்றறிக்கை | திருத்தப்பட வேண்டிய நிலைக்கு உட்பட்டிருந்த வாகனம் தொடர்பாக 03 மாதங்களுக்குள் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பழுதுபார்த்தல்களுக்கோ அல்லது |

| | | |
|---|---|---|
| | மற்றும் 2010 யூலை 14 ஆம் திகதிய பீஎப்/எப்எஸ்/ஏ/வாகனம்/ 2009 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03, 05 ஆம் பந்தி | பதிவழிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 10 வாகனங்கள் தொழில்நுட்பக் கோளாறிற்கு உட்பட்டு 03 மாதங்கள் முதல் 43 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) | (i) 25 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,214,939 கூட்டுத்தொகையான முற்பணம் நிறைவேற்றுத்தரமில்லாத 17 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.<br><br>(ii) 34 உத்தியோகத்தர்களுக்கு 161 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 6,671,593 தொகையான முற்பணம் 05 நாட்கள் முதல் 256 நாட்கள் வரையான காலப்பகுதியின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 மார்ச் 01 ஆம் திகதிய 09 ஆம் இலக்க கொள்வனவுக் கைநூலின் 9 ஆம் இலக்கம் மற்றும் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2:14:1 | பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரால் உரிய செயற்பாட்டிற்காகவே கேள்விச் சபை ஒன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் சமுர்தி வங்கிச் சங்கங்களுக்காக ரூபா 13,548,207 பெறுமதியான கணனி கொள்வனவு செய்யப்படுகையில் இது அதிகாரசபையின் பொது கேள்விச் சபையின் மூலம் மதிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 1,090,472,562 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 771,327,538 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 319,145,024 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. அலுவலக கிரயம் தவிர்ந்த ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 317,468,990 தொகையால் அதாவது 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் பதவியணிக் கிரயம் ரூபா 715,099,144 ஆல் அதாவது 8 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடப்பட்ட இலக்கை எய்துவதிலான முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் அபிவிருத்தி இல. 10 இனால் மீளாய்வாண்டிற்காகத் திட்டமிடப்பட்ட 2830 நிகழ்ச்சித்திட்டங்களில் 2300 நிகழ்ச்சித்திட்டங்கள் அதாவது 81 சதவீதம் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 150 மில்லியன் தொகையால் ரூபா 134 மில்லியன் தொகை அதாவது 89 சதவீதமான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் பிரிவு 3 இனால் ரூபா 2.74 மில்லியன் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 22 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

**4:2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால் இரண்டு நிறுவகங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,250,000 தொகையும் ரூபா 750,000 தொகைக்குமாக முறையே 2003 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை எவ்வித நலனும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் மீளாய்வாண்டின் ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்காக ரூபா 3,457,500,000 கூட்டுத்தொகை சமுர்த்தி நலன்பெறுனர்களின் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இப் பண விடுவிப்பு, மீளறவீடு மற்றும் அறவிடப்பட வேண்டிய வட்டித் தொகை தொடர்பாக பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் திறைசேரி அல்லது சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்துடன் எழுத்து மூல இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சமுர்த்தி நலன்பெறுனர்களின் கட்டாய சேமிப்புகள் மற்றும் வங்கி நிதிப் பிரிவின் ஏனைய நிதியங்கள் மற்றும் ஒதுக்கத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடு, முதிர்வடைவதற்கு முன்னர் காசாக மாற்றப்பட்டு மேற்குறித்த பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணத்தால் முதலீட்டிற்காக கிடைக்கப்பெற்றிராத வட்டி அளவு ரூபா 169,139,772 ஆகக் காணப்பட்டது.

(iii) சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 3,457,500,000 தொகையான மொத்த தொகையில் 2014 நவம்பர் அளவில் ரூபா 2,618,639,772 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் இப் பணம் அறவிடப்படுவதற்காக போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இந் நிதியம் மீள முதலீடு செய்யப்படுவதன் மூலம் 2013 திசெம்பர் 31 வரையில் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளப்படக்கூடியதாகக் காணப்பட்ட வருமானம் ஏறத்தாழ ரூபா 50,324,000 தொகை கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) இரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உரித்தான 11 சமுர்த்தி வங்கிச் சங்கங்களால் முதலீட்டிற்காக சமுர்த்தி பொதுச் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படும் ரூபா 20,951,830 தொகை உரிய பொதுச் சங்கத்தால் முதலீடு செய்யப்படுவதற்காக 5 முதல் 17 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது.

(ஈ) 2001 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை நேர்ந்திருந்த 13 வாகன விபத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 312,949 தொகையான காப்புறுதி நட்டஈட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையால் பயிற்சி நிலையமாக நாடாத்தப்பட்டு வரும் 21 ஏக்கர் 02 ரூட் 37.25 பேர்ச் நில்லம்ப பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணி 91.29 பேர்ச் அளவான 06 காணித் துண்டுகளில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக அதிகாரசபை எவ்வித சட்டரீதியான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக 2012 சனவரி 01 ஆம் திகதி நடாத்தப்பட்ட 232 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி அறவிடப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு காணி கையேற்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நாடெங்கிலும் உள்ள வங்கிச் சங்கங்களில் தரவுகளை கணனி மயப்படுத்துவதற்காகவும் சகல வங்கி சங்கங்களையும் வலையமைப்பாக்கப்படுவதற்காகவும் ‘‘திறந்த நிதிசார் வங்கித் தீர்வு’’ எனும் பெயர்கொண்ட கணனி மென்பொருள் அபிவிருத்தி, வழங்கல், மற்றும் ஸ்தாபிப்பை செயற்படுத்திக் காண்பிப்பதற்காக 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி வழங்குனர் ஒருவருடன் ரூபா 12,750,000 தொகையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனையின் படி, உரிய ஒப்பந்தம் 12 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையிலும் ரூபா 7,165,000 தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 10 ஆண்டுகளுக்கு மேலான காலமாக 4 நிறுவகங்களால் அறவிடப்பட வேண்டிய ரூபா 167,735,462 தொகையான பெறவேண்டிய மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேசத்திற்கு மகுடம் - 2014 நிகழ்ச்சித்திட்டத்திற்காக பொதுத் திறைசேரியால் மீள மீள்நிரம்பல் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது சமுர்த்தி நிதியத்தால் ரூபா 212 மில்லியன் தொகை 3 மாவட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இந் நிதி 2014 யூன் வரையிலும் பொது திறைசேரியால் மீள்நிரப்பப்படுவதற்காக அதிகாரசபை தவறியிருந்தது.

### 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் சேவையிலிருந்து கேட்டு விலகலுக்கு விண்ணப்பித்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகாரசபைக்கு அறவிடப்படுவதற்கிருந்த ரூபா 336,908 தொகை அறவிடப்படாது அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், அவர்களுக்கு உரித்தான பணிக்கொடையில் இப் பணம் அறவிடப்படுவதற்கான அதிகாரம் இல்லாத போதிலும் அவ்வாறு அறவிடப்படுவதற்கான எதிர்பார்ப்பிலிருந்து 2013 யூலை 05 ஆம் திகதி முதல் இவ் உத்தியோகத்தர் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மே வரையிலும் உரிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நலவாய தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்புச் சங்கத்துடன் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவும், இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும் ஒருங்கிணைந்து சுனாமிப் பேரழிவிற்கு உட்பட்ட மக்களின் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்புவதற்காக மோல்டா அரசாங்க மானியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய தொடர்பாடல் மத்திய நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழவால் வழங்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் பொது வைப்புக் கணக்கில் நிலவிய ரூபா 581,211 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) மின் கோர்ப்பு கடன் வசதிகள் நிகழ்ச்சித்திட்டம்**

சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கும் குறைந்த வருமானத்தைப் பெறும் மக்களுக்கும் மின்சார சேவையை வழங்கும் நோக்கில் மின் கோர்ப்பு செயற்திட்டத்தின் கீழ் வசதியளிக்கப்படுவதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 3,000 மில்லியன் தொகை வழங்கப்படுவதற்காக இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2010 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,080 மில்லியன் தொகையான கடன் வசதிகள் இலங்கை மின்சார சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஏப்ரல் வரையில் இத் தொகை ரூபா 1,300 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறித்த உடன்படிக்கையின் 05 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம், சேவை வழங்கல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை அதிகாரசபையால் பெற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து கடன் வசதிகளை விடுவிக்க வேண்டிய போதிலும், விடுவிக்கப்பட்ட ரூபா 1,300 மில்லியன் தொகையில் ரூபா 350.1 மில்லியன் தொகைக்குரிய 22 மாவட்டங்களின் விபரம் மீளாய்வாண்டிற்கு உரித்தாக மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறே 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான நலனாளிகள் தொடர்பான விபரம் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் நிபந்தனை இல. 6 இன் பிரகாரம் மேற்குறித்த (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட 22 மாவட்டங்களின் தகவல்களில் 2014 யூன் வரையில் அதிகாரசபையால் 05 மாவட்டங்களின் தகவல்கள் மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. இதன் படி இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி சேவை வழங்கல்கலை வழங்கிய 67,677 நலனாளிகளில் 1,968 நலனாளிகள் அதாவது 2.9 சதவீதம் மாத்திரமே உறுதிப்படுத்தியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனை இல. 11 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் கலந்துரையாடப்படுவதற்காக இரு தரப்பினரது கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்பட்டிராததுடன் இலங்கை மின்சார சபையின் தலைவரின் அழைப்பில் 2014 சனவரி 09 ஆம் திகதி நடாத்தப்பட்ட விசேட கலந்துரையாடலின் போது, உடன்பட்டவாறு, இருதரப்பு உத்தியோகத்தர்களால் ஆன ஓர் கூட்டத்தின் மூலம் இதற்கான முறைப்படியான ஓர் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்குறித்த விசேட கலந்துரையாடலின் போது உடன்பட்டவாறு இலங்கை மின்சார சபையால் நலனாளிகளிடமிருந்து அறவிடப்பட்ட ஒரு பகுதி பணம் சமுர்த்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஏப்ரல் மாதமளவிலும் இரண்டு மாதங்களுக்கு உரித்தான ரூபா 149,000 மாத்திரமே அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் இந் நிதியத்திற்கு உரித்தான நலனாளிகளின் போதிய விபரம் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் அப் பணத் தொகையும் உரிய சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) இலங்கை மின்சார சபையிலிருந்து அறவிடப்பட்டிருந்த கடன் தவணைப்பணங்களுக்கு உரித்தான 10 சதவீத வட்டியில் 2 சதவீத அளவு உரிய சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு வழங்கப்பட இருந்த போதிலும்

2014 ஏப்ரல் மாதம் வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 128,179,758 தொகையில் எவ்வித தொகையும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே உடன்படிக்கையின் 10 ஆம் இலக்கத்தின் படி, நலனாளிகளிடமிருந்து கடன் தவணைப் பணத்தை அறவிடுவது தொடர்பான தகவல்கள் உடன்பட்ட விதத்தில் இலங்கை மின்சார சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மேற்குறித்த விடயத்தின் படி, மொத்த நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை எய்தியிராமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சமுர்த்தி நலனாளிகளின் கட்டாய சேமிப்பிற்கான நலன் கொடுப்பனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கி நிதிப் பிரிவின் முதலீட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்காக நலன்கள் தீர்மானிக்கப்படுகையில் ரூபா 13,553 மில்லியன் தொகை அதாவது மொத்த முதலீட்டில் 72 சதவீதமான கட்டாய சேமிப்பு நிதியத்திற்காக உரித்துடைய முதலீட்டு வருமானங்கள் ரூபா 1,655 மில்லியன் தொகையில் நலனாளிகளுக்கு ரூபா 836 மில்லியன் தொகையான 51 சதவீதம் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் முதலீட்டு வருமானத்தில் 44 சதவீதம் வங்கி நிதிப் பிரிவின் செலவினத்திற்காக கழிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த முதலீட்டு நிதியத்தில் 72 சதவீதம் உரித்தான கட்டாய நிர்மாணிப்பிற்காக ஆண்டின் மொத்த முதலீட்டு வருமானத்தில் 38 சதவீதம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(iii) கட்டாய நிர்மாணிப்புகள் நிதியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தவிர்ந்த முதலீட்டிற்காக பெற்ற ஏனைய நிதியத்திற்காக 11 சதவீதமும் எஞ்சிய ரூபா 161 மில்லியன் தொகையும் அதாவது மொத்த முதலீட்டு வருமானத்தில் 7 சதவீதமும் அதிகாரசபையில் வைத்துக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டிற்காக தேறிய வட்டி உழைப்பு விகிதம் கணிப்பிடப்படுகையில் ஊழியர் கடன் வட்டி வருமானம் ரூபா 185 மில்லியன் தொகையும் பெற்றுக்கொள்ளப்பட்ட பங்கிலாபம் ரூபா 11 மில்லியன் தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) தேறிய வட்டி விகிதம் கணிப்பிடப்படுவதற்காக மீளாய்வாண்டிற்கு உரித்தற்ற ரூபா 46 மில்லியன் தொகையும் உள்ளபடியான செலவினத்தைப் பார்க்கிலும் ரூபா 386 மில்லியன் தொகை ஆண்டின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(vi) 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை முதலீட்டு நலன்களிலிருந்து சகல செலவினங்களும் கழிக்கப்பட்டதை அடுத்து கட்டாய சேமிப்பு நிதியத்திற்காக செலுத்த வேண்டிய எனினும், அவ்வாறு செலுத்தப்பட்டிராத தொகை ரூபா 1,549 மில்லியன் தொகையானதுடன் இப் பணம் சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் வேலைகள் 2014 யூன் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ‘மிஹிஜய’’ கடன் தீர்மானத்திட்டத்தின் கீழ் 10 சதவீதமும் 8 சதவீதமுமான வட்டி வீதத்தின் கீழ் நலன்பெறுனர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு உரித்தான வட்டிச் சலுகைகளுக்கு உரித்தான 09 வங்கிச் சங்கங்களுக்காக 2012 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட வேண்டிய ரூபா 1,689,811 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) சமுர்த்தி நலன்பெறுனர்களினதும் குறைந்த வருமானம் பெறுபவர்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மரக்கறி, மலர்ச் செடிகள் மற்றும் பழப் பயிர்களின் உற்பத்திக்கு பாதுகாப்பான வீட்டு நிர்மாணிப்பிற்காக மீள அறவிடப்படாத அடிப்படையில் ஒருவருக்கு ரூபா 80,000 படி 2012 ஆம் ஆண்டில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் இரண்டின் 30 நலன் பெறுனர்களுக்கு ரூபா 2,220,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தன. அங்கு திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கத்தை எய்தும் வகையில் பிரதேசத்தின் தேவைப்பாட்டிற்கு சீராக்கப்படும் வகையில் நாற்றுப் பயிர்கள் தயாரிக்கப்பட்டிராததுடன் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திராமையும் தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) இரண்டு பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான 15 வங்கிக் கணக்குகளின் ரூபா 4,413,423 கூட்டுத்தொகையான அறவிடமுடியாக் கடனை அறவிடுவதற்கு போதுமான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொகையில் 50 சதவீதம் மீள அறவிடப்படும் அடிப்படையில் நலன்பெறுனர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் மாதாந்தம் 10 தவணைமுறையில் சுழற்சி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் ரூபா 4,923,484 கூட்டுதொகையான கடன் மீதி 2014 நவம்பர் வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட கள நிதி வங்கியிலிடல் தொடர்பான திறன் அபிவிருத்தி சான்றிதழ் 20 பாடநெறிகளுக்காக ரூபா 19,848,775 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பயிற்சி அமர்வுகளை நடாத்துவது தொடர்பாக ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பயிற்சி அமர்வுகள் இரண்டில் வளப் பகிர்வாளர் படிப்பணத்திற்காக உடன்பட்ட தொகையைப் பார்க்கிலும் ரூபா 120,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி காகிதாதிகளின் இருப்பு களஞ்சியப்படுத்தப்படுவதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட ஜாவத்தை சலுசல களஞ்சியம் இருந்த காகிதாதிகளின் இருப்பு 2010 ஆம் ஆண்டின் போது முற்றாக அகற்றப்பட்டிருந்த போதிலும் களஞ்சியத்திற்காக வழங்கப்பட்டிருந்த வாடகை வைப்புகளில் ரூபா 1,454,112 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாடளாவிய அடிப்படையில் இனங்காணப்பட்ட வெளிநாட்டிற்குச் செல்லும் உழைப்பாளர்களுக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்காக உதவிகளைப் பயன்படுத்தும் நோக்கில் ‘‘ரட்டவிரு’’ வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதிகாரசபை,

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் 2012 மார்ச் 07 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வுடன்படிக்கையின் உடன்பாட்டு இல. 10 இன் பிரகாரம், இந் நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தமைக்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் அதிகாரசபையின் ரூபா 100 மில்லியன் தொகையான வைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்கும் இதற்கு உரித்தான வட்டி இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு வழங்கப்படுவதற்கும் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன. எனினும் இந் நிதியம் ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் அதிகாரசபைக்குக் கிடைக்கும் நலன் தொடர்பாகவோ அல்லது கடன் கொடுப்பனவைச் செலுத்தாத கடன்பெறுனர்களின் நிலுவை மீதி இந் நிதியத்தால் பூரணப்படுத்த முடியுமா என்பது தொடர்பாகவோ உடன்பாட்டிற்கு வருவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கு உரித்தான முதலீட்டு வருமானத்தில் ஒரு வங்கிச் சங்கத்தால் ஒரு வருடத்திற்கு ரூபா 10,000 படி கழிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட வங்கிச் சங்கம் மேம்பாடு மற்றும் பிரசார நிதியத்தில் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 19,790,806 தொகையான செலவினத்தில் ரூபா 9 மில்லியன் தொகைக்கு மேலான தொகை நிதியத்தின் நோக்கத்திற்கு மாறாக வேறு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத அரசாங்க சேவை உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற உத்தியோகத்தராக போலியான தகவல்களை சமர்ப்பித்து முறையான நேர்முகப்பரீட்சையின்றி அதிகாரசபையின் மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க சேவையில் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த இவ் உத்தியோகத்தருக்கு 2007 யூலை முதல் 2013 நவம்பர் வரையான காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 2,450,815 தொகை அவரது நிரந்தர அலுவலகத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அவரது நிரந்தர அலுவலகத்தால் போதிய உறுதிப்படுத்தல்கள் வழங்கப்படாது மேற்குறித்த காலப்பகுதிக்காக அதிகாரசபையாலும் ரூபா 2,630,765 தொகை சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இதற்கு மேலதிகமாக யுத்தத்தால் குடிபெயர்ந்த மற்றும் மக்களின் வாழ்க்கை ஸ்தம்பிதமான வவுனியா மாவட்டத்தின் 28 நலனாளிகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக முறிந்த இரு கரங்களை உறுதிப்படுத்தும் சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,976,990 தொகை குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மேற்குறித்த விடயம் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று/ சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் பணத்தை மீள அறவிடப்படுவதற்கும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூகத்தின் பல்வேறு பாதகமான நிலையில் நிர்க்கதிக்கு உள்ளாகும் நபர்களுக்கு உதவியளிக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சமூக அபிவிருத்தி நிதியத்திற்காக

சமுர்த்தி கொடி விற்பனையின் மூலம் அன்பளிப்பாளர்களிடமிருந்து நிதி உதவியும் வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் சேகரிக்கப்படும் நிதியம் அப் பகுதியிலேயே நோக்காகக் கொண்ட செயற்பாடுகளுக்காக செலவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 321 பிரதேச செயலகப் பிரிவுகளில் நிலவிய ரூபா 160,787,882 தொகை உரிய நோக்கத்திற்காக செலவிடப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) பிரதேச செயலகத்தால் ரூபா 5,000 படி சேகரித்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய மீதி ரூபா 2,947,206 தொகையானதுடன் அத் தொகை நிதியத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) ஓட்ட நிலையில் உள்ள அதிகாரசபைக்கு உரித்தான மோட்டார் வாகனம் ஒன்று ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 2014 யூன் வரையிலும் செத்சிறிபாய வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

நிதி மோசடி/ முறைகேடுகள் காரணமாக வேலை நீக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரு பெண் உத்தியோகத்தர்களாலும் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த 03 வழக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கையில் அதிகாரசபையின் நிர்வாக நலிவுகள் காரணமாக தொழில் நீதிமன்றக் கட்டளையின் படி ரூபா 784,384 தொகை ஊழிய நட்டஈடாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.8 முறையான விதத்தில் கையேற்கப்பட்டிராத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், காணிகளின் உரிமை அதிகாரசபைக்கு முறைப்படி கையேற்கப்படாது கட்டிடங்களை நிர்மாணித்தமைக்காக 17 மாவட்டங்களுக்கு உரித்தான 228 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 744 சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்காக ரூபா 657,651,017 தொகையும் 16 மாவட்டங்களுக்குரித்தான 142 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 143 சமுர்த்திச் சங்கங்களுக்காக ரூபா 249,770,480 தொகையான செலவினம் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தன. அக் காணிகளின் நில அளவு இனங்காணப்பட்டு அதிகாரசபை கையேற்பதற்கோ அல்லது நீண்ட கால வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கோ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தால் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அந் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான விளக்கங்கள் 2014 யூன் வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 பதவியணி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பதவியை விட்டு விலகிய உத்தியோகத்தர்களை மீள சேவைக்கு அமர்த்தல்**

(i) அதிகாரசபையின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் சேவையில் ஈடுபட்டிருந்து சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் தகுதிகாண் காலத்தில் மூன்று உத்தியோகத்தரும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரும் பதவி விலகிச் சென்றிருந்தனர். தாபனவிதிக்கோவை, செயன் முறைக் கோவை விதி மற்றும் அரசாங்கத்தின் வேறு பிரமாணங்கள் மீறப்பட்டு 4 முதல் 12 ஆண்டு காலப்பகுதியின் பின்னர் இவ் உத்தியோகத்தர்கள் மீள சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் சேவையை விட்டு விலகிச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது பெற்றுக்கொள்ளப்படும் சம்பளப் பரிமாற்றங்களில் மீள

அமர்த்தப்பட்டு சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் பதவியை விட்டு விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்கள் பல ஆண்டுகளின் பின்னர் மீள சேவைக்கு அமர்த்தப்படுகையில் தாபனவிதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 8:1 ஆம் பிரிவு மற்றும் செயன் முறைக் கோவை விதி 164 இன் பிரகாரம், முன்னைய சேவைக் காலத்திற்காக எவ்வித நலனையும் பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற போதிலும் மீள சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுகையில் அதிகாரசபையின் முன்னைய சேவைக் காலத்தையும் உரித்தாக்கிக் கொண்டிருந்ததுடன் இவ் உத்தியோகத்தர்கள் மீள சேவைக்கு சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பிரதம எழுதுவினைஞர் பதவிக்காக உத்தியோத்தர்கள் ஆட்சேர்க்கப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் பிரதம எழுதுவினைஞர் பதவிக்காக 06 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும், தாபனவிதிக்கோவையினதும் செயன்முறைக் கோவை விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இவ் ஆட்சேர்ப்பிற்காக தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5:2:6 இன் படியான நேர்முகப் பரீட்சைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இவ் ஆட்சேர்ப்பிற்காக நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றால் புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய விதத்தைக் காண்பிக்கும் வகையிலான நிர்ணயங்கள் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிராததுடன் வழங்கப்பட்ட புள்ளிகள் தொடர்பாக ஏடுகளின் மூலப் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகமைகளைக் கொண்டிராத எழுதுவினைஞர் சேவைக்கு புறம்பாக பெண் உத்தியோகத்தருக்கும் பிரதம எழுதுவினைஞர் பதவியொன்று வழங்கப்பட்டிருந்தது.

(இ) கம்பஹா மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகள் இரண்டில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பியகம மற்றும் வத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உரித்தான இரு சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் 27 உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,159,674 தொகையான நிதி மோசடி தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் 06 பேருக்குரிய ஒழுக்காற்று விசாரணை பூர்த்திசெய்யப்பட்டு ஒழுக்காற்றுக் கட்டளை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடையே ரூபா 117,000 தொகையான நிதி மோசடி உள்ளடங்கலாக 5 குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்ட பெண்

உத்தியோகத்தருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைக்காக விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 2011 ஆம் ஆண்டின் போது உரிய பெண் உத்தியோகத்தரின் பதவி விலகிச் சென்றிருந்தார். உரிய பெண் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று கட்டளை செயற்படுத்தப்பட்டிராத போதிலும் மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூபா 128,970 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேற்குறித்த குற்றச்சாட்டுக்களைப் பெற்ற ஒரு பெண் சமுர்த்தி முகாமையாளர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அதன் தீர்வு கிடைக்கப்பெறும் வரையில் அவர் பணக் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத இடத்தில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதாக வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு முரணாக சமுர்த்தி வங்கிச் சங்கம் ஒன்றில் முகாமையாளராக ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) அதிகாரசபையின் பதவியணியால் ஒழுக்கம் தவறியமை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை உள்ளடங்கலாக முறையான பதிவேடு ஒன்றும் ஒவ்வொரு விசாரணைகளுக்கும் உரித்தான செலவினங்கள் வேறாகவும் இனங்காணப்படக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட ஓர் பதிவேடு பேணப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளின் முழுமையான முன்னேற்றம் தொடர்பான ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒழுக்காற்று விசாரணையின் முடிவில் வழங்கப்பட்ட ஒழுக்காற்று கட்டளையை செயற்படுத்துவது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முறையான பதிவேடு ஒன்று பேணப்படுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பணிப்பாளர் நாயகத்தால் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.10 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து 2011 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 06 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது செத்சிறிபாய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையால் வெளிநிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் 12 வாகனங்கள் கையேற்கப்படுவதற்கும் வேறு அமைச்சொன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த ஒரு வாகனம் மீளப் பெறப்படுவதற்கும் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் பல சந்தர்ப்பங்களின் போது திருத்தப்பட்டிருந்ததுடன் இதன் படி செயல்நடவடிக்கைத் திட்டம் அதிகாரசபை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப எதிர்வுகூறலாக கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் படி, அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதிகளினதும் நடவடிக்கை தொடர்பாக மீளாய்வாண்டின் போது போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட செலவினத்தைப் பார்க்கிலும் உள்ளபடியான செலவினம் 138 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலளிப்பு**

மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்டிருந்த 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுவதற்கு 2014 நவம்பர் மாதம் வரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதியக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) பதவியணி முகாமைத்துவம்
(உ) கடன் முகாமைத்துவம்